செய்தி வெளியீடு எண். 161 நாள் : 22.03.2017

**திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் மற்றும் திருமழிசை பேரூராட்சி பகுதிகளில் குடிநீர் சிக்கனத்தை வலியுறுத்தும் விழிப்புணர்வு பேரணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் மற்றும் திருமழிசை பேரூராட்சி பகுதிகளில் குடிநீர் சிக்கனத்தை வலியுறுத்தும் விழிப்புணர்வு பேரணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (22.03.2017) கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் கோளப்பன்சேரி ஊராட்சி, ஊராட்சி மன்ற அலுவலகத்தில் மகளிர் சுய உதவி குழுக்கள் மூலமாகவும், திருமழிசை பேரூராட்சி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பள்ளி மாணவ – மாணவிகள் மூலமாகவும் குடிநீர் சிக்கனத்தை வலியுறுத்தும் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து கூறியதாவது

திருவள்ளூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை 58 சதவீதம் குறைவாக பெய்துள்ளது. இதன் காரணமாக நீர் இருப்பினை சிக்கனமாக பயன்படுத்தும் விதமாக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த மாவட்ட நிர்வாகம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. 5 பேரூராட்சிகள், 10 பேரூராட்சிகள், 14 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 526 ஊராட்சிகளில் மக்களிடையே குடிநீர் சிக்கனத்தை வலியுறுத்தி விழிப்புணர்வு செய்யப்பட்டு வருகிறது. உரிய அனுமதி இல்லாமல் முறைகேடாக குடிநீரை எடுக்கும் இடங்களை கண்டறிந்து அங்குள்ள பொருட்களை பறிமுதல் செய்ய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. எனவே பொதுமக்கள் உரிய அனுமதி இல்லாமல் குடிநீர் உபயோகிப்பதை தவிர்க்க வேண்டும். உரிய அனுமதியின்றி குடிநீரை மின் மோட்டர் மூலம் தண்ணீர் எடுத்தால் குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படுவதுடன் சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

மேலும், உயர்நீதி மன்ற மதுரை கிளையின் உத்தரவுப்படி மாவட்டத்தில் அனைத்து இடங்களிலும் சீமை கருவேல மரங்களை அகற்றப்பட்டு வருகிறது. பொதுமக்கள் தங்கள் நிலங்களில் உள்ள சீமை கருவேல மரங்களை விரைந்து அகற்றிட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். பொதுமக்கள் அனைவரும் அனைத்து நடவடிக்கைகளிலும் மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு தரவேண்டும் என்று கூறினார்.

முன்னதாக பூவிருந்தவல்லி நகராட்சி அலுவலகத்தில், நகராட்சி பகுதிக்குட்பட்ட வீடுகளில் முறைகேடாக குடிநீர் எடுத்து வந்த 23 மின் மோட்டர்களை நகராட்சி பணியாளர்கள் பறிமுதல் செய்து வைக்கப்பட்டிருந்ததை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சிகளில் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.ஆர்.ஸ்ரீதர், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு.ஆர்.செந்தில் குமார், பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையர் திருமதி.சித்ரா, பூவிருந்தவல்லி வட்டாட்சியர் திரு. லட்சுமணன், திருமழிசை பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. பி. யமுனா, பூவிருந்தவல்லி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், நகராட்சி பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~